விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 045 வள்ளுவர் ஆண்டு 2057 தை 19 திங்கட்கிழமை (02.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மாகாண சபைத் தேர்தல் இவ்வாண்டும் இல்லை



கைவிரித்தது அரசாங்கம்

07ஆம் பக்கம் பார்க்க

## உயரப்போகும் பேருந்து கட்டணம்



05ஆம் பக்கம் பார்க்க

## குறைகேள் அரங்கு



03ஆம் பக்கம் பார்க்க

டித்வாவுக்காக அமுலான

# அவசர காலநிலை மீண்டும் நீட்டிப்பு



(கொழும்பு)

டித்வா புயலின் கோரத் தாண்டவத்தில் இருந்து நாட்டை மீளக் கட்டியெழுப் பும் நோக்குடன் ஜனாதிபதி அ நு ர 02ஆம் பக்கம் பார்க்க

## நயினை மீனவர்கள் மீது இந்திய மீனவர்கள் கல் வீச்சு

### ஆதாரங்களுடன் முறையீடு

(நயினாதீவு)

யாழ்ப்பாணம் நயினா தீவு - நெடுந்தீவுக்கு இடைப் பட்ட கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நயினா தீவு மீனவர்கள் மீது கல் வீச்சுத் 15ஆம் பக்கம் பார்க்க

## கொட்டும் மழையிலும் தையிட்டியில் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

வேண்டாம் கிவுல் ஓயா!

# நெடுங்கேணியில் இன்று ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

தமிழர்களின் இனப் பரம்பலுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை மையப்படுத்தி முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள கிவுல் ஓயாத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று (02) திங்கட்கிழமை வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்னால் பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்ட மொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.



(02ஆம் பக்கம் பார்க்க)


## வடக்கில் புதன்வரை மழை தொடரும்

### பேராசிரியர் பிரதீபராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தற்போது கிடைத்து வரும் மழை எதிர்வரும் 04ஆம் திகதி புதன் கிழமை வரை தொடர 15ஆம் பக்கம் பார்க்க

## ரி20 உலகக் கிண்ணம் வடக்கில் பட்டண பிரவேசம்




15ஆம் பக்கம் பார்க்க

# இலங்கைக்கு 400 கோடி இந்திய ரூபாய் நிதி உதவி



### இந்திய அரசின் பட்ஜெட்டில் ஒதுக்கீடு

(டில்லி)

இலங்கைக்கு நிதியுதவியாக 400 கோடி இந்திய ரூபாயை இந்திய மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று (01) இந்திய பாராளுமன்றத்தில் 2026-27 நிதியாண்டிற்கான மத்திய 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ் ராணி ஓமந்தை வரை பயணிக்கும்

### விடுக்கப்பட்டது அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் - காங்கேசன்துறைக்கு இடையிலான யாழ் ராணி 02ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில் விபத்து



02ஆம் பக்கம் பார்க்க

## சட்டத்தின் பிரகாரமே ரணில் மீது விசாரணை

### அமைச்சர் விஜேபால திட்டவட்டம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள நிதி மோசடி வழக்கில் குற்றப் 16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா[illegible] காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி மூலிகை தோட்டத்தில் குறுங்காடு



(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமி மூலிகைத் தோட்டத்தில் நீர்வேலியைத் தளமாகக் கொண்டு இயங்கும் கிறீன் லேயர் சுற்றுச்சூழல் அமைப்பினருடன் சிவபூமி அறக் கட்டளையும் இணைந்து குறுங்காடு ஒன்றினை அமைக்கும் வேலைத் திட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த 31.01.2026 சனிக்கிழமை காலை நடைபெற்றது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதர் சாய்முரளி மற்றும் தூதரக அதிகாரிகள், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் கிறீன் லேயர் அமைப்பின் தலைவர் சசிகுமார் உட்பட கிறீன் லேயர் நிறுவனத்தைச் சேர்ந்தவர் களும் கலந்து சிறப்பித்தனர்.

சுமார் 5 ஆயிரம் மரங்களை உள் ளடக்கியதாக இக்குறுங்காடு அமைய வுள்ளது. (ந-7)

## நன்றி நவிலல்

### திருமதி பாலபரமேஸ்வரி சண்முகராஜா



மண்ணில் 26.01.1940 விண்ணில் 01.01.2026

அம்மாவின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உணவு வழங்கியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகள், சபிண்டீகரணக் கிரியைகள் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டஅனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்

(C-4927)

## நினைவஞ்சலி



அமரர்
### பொன்னுத்துரை சிறிகேசவன்

தோற்றம் 14 - 06 - 1967 மறைவு 12 - 02 - 2025



அமரர்
### சிறிகேசவன் ஸ்ரெபிகா

தோற்றம் 20 - 07 - 2005 மறைவு 30 - 12 - 2024

ஆண்டொன்று ஓடியது
நாட்கள் நாநூறு விரைந்தன
கண் மூடி விழிக்கும் முன்
ஊட்டி விட்ட கையில் இருக்கும்
உணவின் ஈரம் இன்னும் காயவில்லை
காலனும் உமக்கு (மண்ணை) ஊட்டி விட
காத்திருந்தானோ? அங்கே
அப்பா மகள் இருவரும் ஒருவொருக்கொருவர்
உதவியாக இருக்க
போனவர்களைக் காணவில்லையே என

வழிகளை விழி தேடுகிறது
ஏங்கித் தவிக்கிறது இதயம்.
மனக் குமுறலைத் தீர்க்க
மகிழ்வாக பேச வார்த்தைகள் தவிக்கிறது
அப்பாவைப் போல மகன் இருக்கிறான் என
பார்ப்போர் சொல்ல மனம் மெய்ச்சினாலும்
உங்கள் பேச்சைக் கேட்க ஏங்குகிறான்
அமாவாசையிலும் பௌர்ணமியிலும்
ஆத்மார்ந்த உங்கள் ஆத்மாக்கள்
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவுகளுடன்
மனைவி - அம்மா, மகன் - அண்ணா

(6693)

## யாழ். ராணி...

ரயில் சேவை ஓமந்தையுடன் மட்டுப் படுத்தப்படும் எனப் புகையிரத சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

டித்வா புயல் தாக்கத்தால் சேதமடை ந்த ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் காரணமாக காங்கேசன்துறை - கொழும்பு கோட்டை இடையிலான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இருப்பினும் காங்கேசன்துறை - அநு ராதபுரம் இடையிலான யாழ்.ராணி ரயில் சேவைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட் டிருந்தது.

இந்நிலையிலேயே அடுத்த கட்ட புன ரமைப்புப் பணி நிமித்தம் முன்னர் அறி விக்கப்பட்டதன் பிரகாரம் யாழ்.ராணி ரயில் சேவையானது ஓமந்தையுடன் மட்டுப்படுத் தப்பட்டுள்ளது எனப் புகையிரதத் திணைக் களம் அறிவித்துள்ளது.

அதன்பிரகாரம் காங்கேசன்துறையில் இருந்து காலை 06.00 மணிக்கும் ஓமந் தையிலிருந்து பிற்பகல் 03.45 மணிக்கும் குறித்த சேவையானது முன்னெடுக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அவசரகால...

குமார திசாநாயக்கவால் பிரகடனப்படுத் தப்பட்ட அவசரகால நிலை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இதற்கான புதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.

பொது அவசரநிலை காரணமாக பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் வாழ்க்கைக்கு அவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பரா மரித்தல் ஆகியவற்றின் நலன்களுக்காக, அவசரகால நிலையை நீடிப்பது பொருத்த மானது எனத் தாம் கருதுவதாக ஜனா திபதியால் வெளியிடப்பட்டுள்ள குறித்த அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நிலையில் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், ஜனா திபதிக்கு வழங்கப் பட்ட அதிகாரங்க ளுக்கமைய அவ சர காலநிலை நீடி க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## நெடு...

காலை பத்து மணிக்கு நெடுங் கேணி பஸ்நிலை யத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடு படவுள்ளவர்கள் ஒன்றுகூடவுள்ள தோடு அங்கிருந்து பேரணியாகச் சென்று வவுனியா நெடுங்கேணி பிர தேச செயலகத்து க்கு முன்னால் எதிர்ப்புக்கள் வெளி யிடப் படவுள் ள தோடு மகஜரொன் றும் கையளிக்கப்ப டவுள்ளது.

இந்தப்போராட்ட த்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசி யக் கூட்டணி, ஸ்ரீ ரெலோ உள்ளிட்ட அரசியல் கட்சிகளும் வவுனியா, மன் னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங் களைச் சேர்ந்த பொது அமைப்புக்களும் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

முன்னதாக 2011ஆம் ஆண்டு இத்திட் டம் கொண்டுவரப்பட்ட நிலையில், அப் போது வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்புக்களை அடுத்து அது கிடப்பில் போடப்பட்டது. இந்நிலையில் தற்போது குறித்த திட்டம் மீள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு 23 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செல வில் மீண்டும் முன்னெடுப்பதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது.

குறித்த திட்டம் முன்னெடுக்கப்படுமாக இருந்தால், மணலாறுப் பிரதேசம் வெலி ஓயாவாக மாற்றப்பட்டிருக்கின்ற நிலையில், அங்குள்ள குடியேற்ற பெரும்பான்மை மக்களின் நீர்த்தேவை பூர்த்தி செய்யப்ப டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்கள் கையகப்படுத்தப்படும் ஆபத் துக்கள் காணப்படுவதோடு தமிழ் மக்க ளின் வாழ்வாதாரத்தினைப் பூர்த்தி செய் யும் வயல்நிலங்களும் பறிபோகும் ஆபத்துக்கள் காணப்படுவதான கருத்துக் கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த விடயத்தினை அரசாங்கம் கைவிட வேண்டும் என்பதை மக்கள் பிரதிநிதிகளும், சிவில் அமைப்புக் களும் ஆணித்தரமாக வலியுறுத்தும் பொருட்டு இப்போராட்டம் முன்னெடுக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மாங்குளத்தில்...

மாங்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் படு காயமடைந்துள்ளதுடன் மேலும் சிலர் சிறுகாயங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

கண்டி வீதியின் மாங்குளம் - செல்வ புரம் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற குறித்த விபத்துத் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்றினது சக்கரம் காற்றுப்போன நிலை யில், கட்டுப்பாட்டை இழந்த கார் எதிரே பயணித்த வானுடன் மோதி விபத்துக்குள் ளாகி பின்னர் மற்றுமொரு வானுடன் குறித்த கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்துக் காரணமாக A9 வீதி ஊடான போக்குவரத்து 30 நிமிடங்கள் வரை ஸ்தம்பித்தது.

விபத்தினை ஏற்படுத்திய காரை பிர தேச மக்கள் இணைந்து போக்குவரத் துக்குத் தடை இல்லாதவாறு அப்புறப்படுத் தினர்.

விபத்தில் காயமடைந்தவர்களை ஏற்றுவதற்கு 1990 இலக்க சேவையை பெற்றுக்கொள்ள அழைத்தபோது, குறித்த சேவையை அணுக முடியாத நிலை யில்,

அவ்வீதி ஊடாகப் பயணித்த தேர் தல்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனம் மற்றும் பொது மக்களின் வாக னங்களில் காயமடைந்தவர்கள் ஏற்றப் பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ந-7,100,316)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பெயர் பட்டியல் திருத்தப் பணிகள் ஆரம்பம்

## வீடுகளுக்குச் செல்லும் நடைமுறை இம்முறை இல்லை

(கொழும்பு)

**வாக்காளர் பெயர் பட்டியல் திருத்தப் பணிகளை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்க தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும், இம்முறை அந்தப் பணிகளுக்காக கிராம உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் செல்லும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட மாட்டாது என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

அதற்கமைய வாக்காளர்கள் செல்லுபடியான வாக்காளர் பெயர் பட்டியலில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் மற்றும் 2026 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டிய பெயர்கள் தொடர்பிலான தகவல்களை கணக்கெடுப்பு அதிகாரிகளிடம் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை இரண்டு மாத காலத்திற்கு முன்னெடுக்கப்படுவதுடன், அதன் பின்னர் உரிய தகவல்களை உள்ளடக்கிய பெயர் பட்டியல் காட்சிப்படுத்தல், உரிமைகோரல்கள் மற்றும் ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பான அறிவித்தல் எதிர்வரும் மே மாதம் 05 ஆம் திகதி வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த அறிவித்தல் வெளியாகி 28 நாட்களுக்குள் உரிமை கோரல்கள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். 2026 ஆம் ஆண்டு திருத்தத்தின் போது தகை மைகளைப் பூர்த்தி செய்திருந்தும் ஈ.ஆர். படிவத்தில் பெயரை உள்ளடக்க முடியாமல் போன நபர்களுக்கு இந்தக் காலப்பகுதியில் உரிமை கோரல் விண்ண ப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் 2026 ஆம் ஆண்டு பெயர் பட்டியலுக்குத் தகுதியற்ற ஒருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், அது குறித்து ஆட்சேபனை தெரிவிப்பதற் கும் இந்தக் காலப்பகுதியில் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தரிடமிருந்தோ அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திலிருந்தோ பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (க-8)

# தேசிய இலக்கியப் போட்டியில் வவுனியா மாணவி சாதனை



(வவுனியா)

தேசிய இலக்கியப் போட்டியில் வவுனியா இராசேந்திராங்குளம் அ.த.க பாட சாலை மாணவி தேசிய ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

புத்தசாசன, சமய மற் றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய இலக்கிய போட்டித் தொடரில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் இடம்பெற்ற தேசிய இலக்கிய விழாவின் போது வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த இராசேந்திரங்குளம் அ.த.க பாடசாலை மாணவி பிரபாகரன் வினுசா கனிஸ்ட பிரிவில் பாடல் நயத்தல் நிகழ்வில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தையும், பணப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டார். (8-250)

# முத்தையங்கட்டுக்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்படும் அபாயம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நைனமடு பகுதியில் 50 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக முத்தையங்கட்டு குளத்திற்கு நீர்வரத்து அதிகரித்து வருவதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முல்லைத்தீவு பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, முத்தையங்கட்டு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குளத்தின் தாழ் நிலப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களும், விவசாயிகளும் அவதானமாக இருந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க)




கிருஷ்ணராஜ்

## வீதியோரங்களில் கொட்டப்படும் குப்பைகள்; மக்கள் உணர்ந்து செயற்படுவார்களா!

மனிதர்களாகிய அனைவரும் தாமும் தம்மை சூழவுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்திருப்பதையே விரும்புவர்.

தம்மை சூழ உள்ள இடங்களை சுத்தமாக வைத்திருக்கின்றோம் என்ற பெயரில், ஏனையவர்கள் வாழும் சூழலை அசுத்தப்படுத்துவது என்பது மனித நேயத்திற்கு புறம்பான ஒரு செயலாகும்.

குறிப்பாக யாழ்ப்பாணம் காக்கைதீவு மீன் சந்தைக்கு அண்மித்த வீதியின் இருமருங்கிலும் பொதுமக்கள் ஏராளமான குப்பைகளை போடுகின்றனர்.

குப்பை போடவேண்டாம் என்று எழுதி வைத்தால் கூட, அதற்கு முன்பாகவும் குப்பை போடுகின்ற அளவிற்கு நமது தமிழ் சமுதாயம் மாறி விட்டது என்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை என்னவென்று சொல்வது. தம்மை போன்று தானே மற்றவர்களும் சுத்தமாக-ஆரோக்கியமாக வாழ விரும்புவார்கள் என்பதை உணர்ந்து கொள்வது தான் நீதி.

குப்பைகளை அகற்றுவதற்குப் பல வழிகள் உள்ளன. ஆனால் நாம் ஏன் கஷ்டப்பட வேண்டும். மற்றவர்கள் பார்த்துக்கொள்ளட்டும் என்கின்ற மனநிலையும் குப்பைகளை உரிய இடத்தில் ஒப்படையுங்கள் என்று திரும்ப திரும்ப சொன்னாலும் நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள் நாம் செய்வதையே செய்வோம் என்ற மனநிலையும் மக்களிடம் ஏற்பட்டு விட்டது.

இந்த மனநிலையில், மக்கள் வசிக்கும் குடியிருப்புக்களுக்கு அண்மையிலும் தெருவோரங்களிலும் குப்பைகளை வீசிவிட்டு செல்கின்ற நிலைமை வந்துவிட்டது.

இது ஒருபுறமிருக்க, குப்பைகளை அகற்றுவதற்கு உள்ளூராட்சி அமைப்புக்களின் வாகனங்கள் ஒவ்வொரு கிழமையும் பணியில் ஈடுபட்டாலும் அவற்றை உரிய முறையில் மக்கள் பயன்படுத்திக் கொள்வதில்லை.

மாறாக, அவர்கள் வரும் வரை நாம் ஏன் காத்திருக்க வேண்டும் என்ற நினைப்பில் அந்தச் சேவையை அலட்சியப்படுத்திவிட்டு, தன்னிச்சையாகவும் பொறுப்பற்ற விதத்திலும் மக்கள் செயற்படுகின்றனர்.

இதேவேளை யாழ். மாநகர சபை ஊழியர்கள் குப்பைகளை தரம் பிரித்து தரும்படி மக்களிடம் கூறுகின்றனர். எனினும் அதனை மக்கள் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

அதேநேரம் சுத்திகரிப்பு ஊழியர்களில் ஒரு பகுதியினர், தரம் பிரித்தலை அடிப்படையாகக் கொண்டு இலஞ்சம் பெறுவதற்கு முற்படுகின்றனர். இதன் காரணமாகவும் மக்கள் தமது வீட்டுக் குப்பைகளை வண்டில்களில் ஒப்படைப்பதற்கு தயங்குகின்றனர்.

இதனாலும் மக்கள் குப்பைகளை தெருவோரங்களில் வீசி விட்டு செல்கின்ற நிலைமை ஏற்படுகின்றது.

எனவே ஒவ்வொருவரும் தாமாக உணர்ந்து மற்றவர்களுக்குக் கெடுதி செய்யாமல் தமது வீட்டில் சேருகின்ற குப்பைகளை உரியவாறு அகற்ற வேண்டும். இந்த மனநிலையுடன் செயற்பட்டால் நிச்சயமாக சுத்தமான சூழலை உருவாக்க முடியும்.



அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை 'குறைகேள் அரங்கு' இற்கு புகைப் படத்துடன் எழுதி அனுப்புங்கள்.

"குறைகேள் அரங்கு", ஆசிரியர் வலம்புரி, இல.191 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

076 636 3378

valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆவது போட்டியிலும் வெற்றி தொடரைக் கைப்பற்றிய இந்தியா



இந்திய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் சார்பில் இஷான் கிஷன் அதிகபட்சமாக 103 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இந்தநிலையில் 272 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 225 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணியின் சார்பில் பின் ஏலன் 80 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இந்தநிலையில் 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரை இந்திய அணி 4-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. (3)

# முதலாவது ரி-20 போட்டி; இலங்கையை வீழ்த்தியது இங்கிலாந்து



இங்கிலாந்து அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற் றும் ரி-20 தொடர்களில் விளையாடி வருகிறது.

முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என கைப்பற்றி அசத்தியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கான முதல் ரி-20 போட்டி பல்லேகலேவில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. மழை காரணமாக போட்டி 17 ஓவராகக் குறைக்கப்பட்டது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 16.3 ஓவரில் 133ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

குசால் மெண்டிஸ் 37 ஓட்டங்களும் பெதும் நிசங்கா 23 ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித், சாம் கர்ரன் தலா 3 விக்கெட்டுகளும் லியாம் டாசன், ஜேமி ஓவர்டன் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 134 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பிலிப் சால்ட் 46 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டாம் பெண்டன் 29 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில், இங்கிலாந்து 15 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 125 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. இதனால் டக்வொர்த் லூயிஸ் முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதன்படி, இங்கிலாந்து அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (3)

# தேசிய மட்ட காற்பந்தாட்ட போட்டியில் வசாவிளான் மத்திய கல்லூரி சம்பியன்!



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட காற்பந்தாட்ட போட்டியில் வசாவிளான் மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான தேசிய மட்ட கால்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் அநுராதபுர மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் வட மாகாணத்தில் மிகவும் பலம் பொருந்திய அணிகளான வசாவிளான் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து புங்குடுதீவு மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். இருப்பினும் வசாவிளான் மத்திய கல்லூரி அணி வீரர் கஜனிகன் மிகச் சிறப்பான கோலைப் பதிவு செய்ய, முதல் பாதியாட்டத்தில் வசாவிளான் மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித் தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதிலும் வசாவிளான் மத்திய கல்லூரி வீரர் கஜனிகன் மீண்டும் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் வசாவிளான் மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

சிறந்த விளையாட்டு வீரராக வசாவிளான் மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த கஜனிகன் தெரிவு செய்யப்பட்டார். (3-90)


## சேவைநலன் பாராட்டு




**திரு. சிவஞானரட்ணம் ஆனந்தரட்ணம்**

(ஓய்வு பெற்ற முகாமையாளர் - கணக்காய்வுப்பிரிவு
இலங்கை வங்கி வடமாகாணம்)

27.01.1993 அன்று இலங்கை வங்கியில் இணைந்து பல்வேறு பதவி உயர்வுகளைப் பெற்று இலங்கை வங்கியின் வடமாகாண கணக்காய்வுப் பிரவில் முகாமையாளராகப் பதவி வகித்து 30.01.2026 இல் ஓய்வு பெற்று 02.02.2026 இன்று தனது 60 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் திரு. **சிவஞானரட்ணம் ஆனந்தரட்ணம்** அவர்கள் தனது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் :

உதவிப் பொது முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி வடமாகாண காரியாலயம்

(C-4914)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்படும்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

**(கொழும்பு)**

**எரிபொருள் விலையில் சிறிய வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், எதிர்காலத்தில் பேருந்து கட்டணங்களை அதிகரிக்க நேரிடும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜூலை மாதத் திற்கு முன்னதாகப் பேருந்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் குறுகிய தூரப் பேருந்து சேவைகளே அதிகம் இயங்குகின்றன. இலங்கையில் 13 ஆயிரம் முதல் 14ஆயிரம் வரையிலான பேருந்துகள் சேவையில் உள் ளன. இதில் சாதாரணமாக 6ஆயிரம் முதல் 7ஆயிரம் மேலதிக பேருந்துகள் உள்ளன. இப்போது கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் பேருந்து போக்குவரத்து செய் வது சாத்தியமற்றதாகிவிட்டது.

முன்னைய பேருந்து கட் டணத் தேசிய கொள்கைக்கு அமைய, கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஒரு லீற்றர் டீசலில் 2 முதல் 3 கிலோமீற்றர் வரை பயணிக் கக்கூடியதாக இருந்தது.

எனினும், தற்போது அந்தத் தூரம் குறைவடைந்துள்ள தாகவும், இப்பகுதிகளில் ஒரு லீற்றர் டீசலில் 2 கிலோ மீற் றருக்கும் குறைவான தூரமே பயணிக்க முடிவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய, பேருந்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளதாகச் சுட்டிக் காட்டிய அவர், குறைந்தபட்ச பேருந்து கட்டணத்தை 5 முதல் 6 ரூபா வரை அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவித் தார். (சு-8)

# கனமழையால் வெள்ளத்தில் மூழ்கிய நெற்பயிர்கள்

(கிளிநொச்சி)

வட மாகாணத்தில் தற் பொழுது கனத்த மழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்பொழுது பெரும்போக அறுவடை நடை பெற்று வரும் நிலையில் அறு வடைக்கு தயாராக இருந்த நெற் கதிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.


குறித்த மழையால் கிளி நொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் நீர் வரத்து அதிகரித்ததன் காரண மாக நீர்மட்டம் தற்பொழுது 36.6 அதிகரித்துள்ளது.

இதனால் இரணைமடுக் குளத்தின் 8 கதவுகளும் 1/2இஞ்சி மேலதிக நீர் திறந்து விடப்பட்டுள்ளது. (8)



கிளிநொச்சி மாவட்டத்தில் டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக மனிதநேய அடிப்படையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இராணுவத்தினரும், கிராம சேவையாளர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, கண்டாவளை பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் விசுவமடு 553 படைப்பிரிவு மாநாட்டு மண்பத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது.



இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூசத் திருவிழாவின் பால்குடப்பவனி நேற்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான பால்குடப்பவனி கே.கே.எஸ் வீதி ஊடாக இணுவில் கந்தசுவாமி கோயிலை வந்தடைந்து முருகப்பெருமானுக்கு பாலாபிசேகம் நடைபெற்றது. பல்குடப்பவனியை தொடர்ந்து நூற்றுக்கணக்கான காவடிகளும் ஆலயத்திற்கு வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:- சிவசாந்தன்)

# கைபேசியை திருடியவர் கைது

(கொழும்பு)


ரஷ்ய நாட்டுப் பெண் ஒரு வரிடமிருந்த சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதி யான கையடக்கத் தொலை பேசியைத் திருடிய நபர் ஒருவரை, உனவட்டுன சுற்றுலாப் பொலிஸ் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள் ளனர்.

குறித்த வெளிநாட்டுப் பெண் செய்த முறைப்பாட் டுக்கு அமைய முன்னெடுக் கப்பட்ட விசாரணைகளின் போதே இந்தச் சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து, கையடக்கத் தொலைபேசி யும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டது.

மேலதிக சட்ட நடவடிக் கைகளை மேற்கொள்ள வுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (8)

# வீதிகளுக்கான வேகக்கட்டுப்பாடு விரைவில் புதிய நடைமுறை




(கொழும்பு)

வீதிகளுக்கான வேகக் கட்டுப்பாட்டைப் புதுப்பிக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய வீதி பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த நடைமுறை அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக, அந்த சபையின் தலைவர் மஞ்சுள் குலரத்ன தெரிவித் துள்ளார்.

வாகனங்களின் வேக த்தை குறைப்பதற்கு அல்லது அதிகரிக்க வேண்டிய வீதி களை அடையாளம் காணவும், அதற்குத் தேவையான ஏற்பாடு களை வழங்கும் வகையில், தரவுத்தளத்திற்கான புதுப்பிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

## போதைப் பொருளுடன் இருவர் கைது


(கொழும்பு)

70 மில்லியன் ரூபாய்க்கும் அதிக சந்தை மதிப்புள்ள 5 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ள னர்.

சந்தேக நபர்கள் காலி, பெந்தர பகுதியில் போதைப் பொருளை விநியோகிக்க முயன்றபோது, ரகசியத் தகவ லின் அடிப்படையில் இந்தச் சோதனையை பொலிஸ முன்னெடுத்திருந்தது.

கைதானவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின் றன.






இரணைமடு கனகாம் பிகை அம்மன் ஆலயத்தில் ஐந்தாவது மகா கும்பாபி ஷேக பெருவிழா ஆயிரக் கணக்கான பக்த அடியவர் கள் புடை சூழ நேற்றைய தினம் பக்திபூர்வமாக இடம் பெற்றது.

(படங்கள்:தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்புமிக்க ஆனந்தமூர்த்தி



## மறைந்தார் மாண்பு

வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரான கந்தசாமி ஆனந்தமூர்த்தி அவர்கள் தனது 70 ஆவது வயதில் கடந்த 17.12.2025 இல் இறைபதம் அடைந்தார்.

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான அவர் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழுவில் நீண்ட காலம் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர். பாடசாலை தொடர்பான அவரது ஆக்கபூர்வமான விமர்சனங்களும் வெளிப்படையாக அவற்றை முன்வைக்கும் பாங்கும் அவரது ஆளுமைக்குச் சான்றாகும்.

ஹாட்லிக் கல்லூரியில் விருந்தினர்களுக்கு மலர்மாலை அணிவிக்கும் கலாசாரம் அவரது அன்பினாலும் துணிச்சலினாலும் உருவாக்கப்பட்டது.

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினூடாக வின்சன் டீபோல் அவர்கள் எவ்வாறு தன்னலமற்ற சேவையை வழங்கினாரோ அவ்வாறே ஆனந்தமூர்த்தி அவர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங் கத்தினூடாக அர்ப்பணிப்பு மிக்கச் சேவையை நல்கினார்.

தமது ஊர்மக்களால் பெரிதும் கவரப்பட்ட அவர், அவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும், அபிவிருத்தியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ஒரு தன்னலமற்ற வழிகாட்டியாக வாழ்ந்து வந்தார்.

நட்புக்கும், விசுவாசத்திற்குமான வரைவிலக்கணமாக அவர் விளங்கினார்.

பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளராக அப்பிரதேச மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் நன்மதிப்பையும், அன்பையும் பெற்றுக் கொண்டமையை அவரது இறுதி நிகழ்வில் காணக்கூடியதாக இருந்தது. அவர் வடமராட்சி கிழக்கு மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றால் மிகையல்ல.

தனது பிள்ளைகளின் கல்வியில் அதீத அக்கறை கொண்டிருந்த அவர் மூத்த மகளை ஆசிரியராகவும், மகனை பொறியியலாளராகவும் இளைய மகளையும் பொறியியலாளராக உருவாக்கினார்.

தபால் திணைக்கள ஊழியரையும் பொறியியலாளரையும் மருமகன்கள் ஆக்கினார். ஆசிரியையான அவரது துணைவியார் என்றும் அவருக்கு பக்கபலமாக இருந்து வந்துள்ளார்.

விருந்தோம்பும் பண்பும் கல்வி அறிவும் பணிவும் கொண்ட அவரது வாழ்க்கை முறை உன்னதமானது. அவரது அன்பும் பரிவும் பாசமும் எக்காலத்திலும் ஒரே விதமாகவே இருந்தது.

அவரது முகத்தில் அச்சம் என்பதை ஒருபோதும் கண்டதில்லை. திறந்த மனதும் ஒழுக்கம் நிறைந்த அவரது வாழ்க்கை முறையும் தெளிவான சிந்தனையும் மனித மாண்பும் அவரது கம்பீரமான தோற்றத்திற்கு காரணமாக இருக்க முடியும்.

எல்லோரையும் ஆனந்தமாக வைத்திருந்த அவர் தனது மரணத்தின் போது எம் அனைவரையும் அழ வைத்து விட்டார்.

பிரதோச தினத்தில் காலமான அவரது ஆத்மாசாந்தி அடைவதாக...

**நடராஜா தெய்வேந்திரராஜா,**
**ஓய்வு பெற்ற யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**முன்னாள் ஹாட்லி கல்லூரி அதிபர்.**

# வவுனியா- கொழும்பு
## புதிய சொகுசு பேருந்து சேவை



(வவுனியா)

வவுனியாவில் இருந்து கொழும்பிற்கான புதிய சொகுசு பேருந்து சேவை ஒன்று இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பேருந்து சேவை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தினமும் காலை 09.05 இற்கு புறப்பட்டு புத்தளம் வழியாக கொழும்பை சென்றடையும்.

வவுனியா சாலைக்கு சொந்தமாக சொகுசு பேருந்துகள் இல்லாத நிலையில் அநுராதபுரம் சாலைக்கு சொந்தமான பேருந்தின் மூலம் இச்சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த சேவையானது முதற்கட்டமாக ஒரு வழிப்பாதை கொண்டதாக அமைந்துள்ளதுடன் வரும் காலங்களில் அது விஸ்தரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வவுனியாவில் இருந்து கொழும்பிற்கு ஒரு பயணிக்கு 1460 ரூபா கட்டணமாக அறவிடப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# வெளிகண்டல் ஆற்றுப்பகுதியில்
# வெளிப்படையாகவே மணல் கொள்ளை
## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

**(குருமபுரம்)**

**கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வெளிகண்டல் ஆற்றுப்பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் ஆற்றுப்படுக்கை மற்றும் வயற்பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் மணல்கள் சட்டவிரோதமாக அகழ்ந்தெடுக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் உழவு இயந்திரத்தின் மூலம் மணலை ஏற்றிச் சென்று அம்மணலை டிப்பர் வாகனத்திற்கு மாற்றி எந்தவித அனுமதியும் இன்றி வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுவதாக அப் பகுதியில் உள்ள பொதுஅமைப்புக்கள் மற்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் மற்றும் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-8-316)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டம் நடத்தும் 45 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் ஜீவநதி சஞ்சிகையின் 267 ஆவது இதழ் அறிமுகமும் கவிஞர் கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய தேடிய தேட்டங்கள் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும், எதிர்வரும் 4.02.2026 புதன்கிழமை மாலை 3 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி (பதில்) கலாநிதி கி. சண்முகநாதன், கலை இலக்கிய விமர்சகர் ஆசிரியர் சி. ரமேஸ், தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் மற்றும் கலை இலக்கிய விமர்சகர் ஆசிரியர் ந.குகபரன் ஆகியோர் வெளியீட்டு மதிப்பீட்டு உரைகளை ஆற்றுவர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 500 | 300 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 150 | 160 | 380 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 500 | 550 | 500 |
| தக்காளி | 300 | 500 | 600 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 | 180 |
| கோவா | 300 | 250 | 300 | 300 | 220 |
| கரட் | 400 | 450 | 400 | 500 | 400 |
| பூசணி | 100 | 140 | 120 | 150 | 300 |
| புடோல் | 300 | 200 | 300 | 300 | 200 |
| வாழைக்காய் | 160 | 200 | 150 | 250 | 160 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 300 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 | 250 |
| பாகற்காய் | 600 | 600 | 700 | 600 | 500 |
| வெண்டக்காய் | 400 | 500 | 300 | 400 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 300 | 300 | -- |
| பயற்றங்காய் | 800 | 700 | 800 | 600 | 600 |
| லீக்ஸ் | 450 | 450 | 300 | 450 | 300 |
| பீற்றூட் | 300 | 300 | 600 | 400 | 300 |
| கறிமிளகாய் | 900 | 700 | 600 | 1000 | 700 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- |
| போஞ்சி | 300 | 350 | 600 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 500 | 300 | 300 | 350 | -- |
| கீரை – 1 பிடி | 120 | 40-140 | 150 | 100 | -- |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 160 | 150 | 100-150 | -- |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 300 | 300 | 400 | 300 | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- |
| வல்லாரை | 60 | 50 | 100 | 80 | -- |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 200 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலுக்கு வாய்ப்பில்லை

## இலங்கையைக் கட்டியெழுப்புவதே முதன்மையானது

### திருவாய் மலர்ந்தார் நளிந்த ஜயதிஸ்ஸ



**(கொழும்பு)**

**மாகாணசபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்துவது சாத்தியமற்றது இருப்பினும் தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் டித்வா தாக்கத்தின் பின்னர் இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.**

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற குழுக்கூட்டத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும். அதற்குரிய ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சகல தரப்பினருடன் கலந்துரையாடி முரண்பாடற்ற தீர்வினை எடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும் இந்த ஆண்டு மாகாணசபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது.

டித்வா புயல் தாக்கத்தின் பின்னர் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும். இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (க-8)



யாழ்ப்பாணம் சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றையதினம் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:சிவசாந்தன்)

### வளர்ப்பு நாயை வீதியில் விட்ட உரிமையாளர்;

## நீதிமன்றம் கடும் எச்சரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வளர்ப்பு நாயினை வீதியில் விட்ட, உரிமையாளரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் கடுமையாக எச்சரித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து, குறித்த முறைப்பாடு தொடர்பாக பரிசீலனை மேற்கொண்டு குறித்த நபருக்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கு, கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நாயின் உரிமையாளர் மன்றில் முன்னிலையாகி இருந்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் பின்னர் கடுமையான எச்சரிக்கையுடன் உரிமையாளர் விடுவிக்கப்பட்டுள்ளார். (8)

## துப்பாக்கி மீட்பு!

(கொழும்பு)

கந்தளாயில் காட்டுப்பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று பாதுகாப்புப் பிரிவினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் சூரியபுர காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போது இந்த ஆயுதம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட துப்பாக்கி உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதோடு இது T-56 ரகத் தோட்டாக்களையும் பயன்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## வீதிப் போக்குவரத்து விழிப்புணர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் பாதுகாப்பான வீதிப்போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான செயலமர்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற குறித்த செயலமர்வில் வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், மாவட்டத்திலுள்ள திணைக்களங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் முதல்வர்கள், றோட்டறிக் கழக உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (8)

## தேசிய போதைப்பொருள் ஒழிப்பு 83 ஆயிரத்து 387 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள "முழு நாடுமே ஒன்றாக" என்னும் தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய இதுவரை சுமார் 83 ஆயிரத்து 387 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முழு நாடுமே ஒன்றாக - தேசிய செயற்பாடு என்ற தொனிப்பொருளின் கீழ் கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் தேசிய போதைப் பொருள் ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விநியோகத்தை வலுவிழக்கச் செய்தல், போதைப் பொருளுக்கான கேள்வியை இல்லாமல் செய்தல், நடவடிக்கைகளை விரைவுபடுத்தல், போதைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளித்து, அதன் பயன்பாட்டை முற்றாக ஒழிக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

## கிளிநொச்சியில் துப்பாக்கிச் சூடு டிப்பர் சாரதி தப்பியோட்டம்

(தருமபுரம்)

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

குறித்த டிப்பர் வாகனத்தை பொலிஸார் சோதனையிட முற்பட்ட போது, பொலிஸாரின் சமிக்ஞையையும் மீறி வாகனம் நிறுத்தப்படாமல் அதிவேகமாக பயணித்துள்ளது.

இதனால், பொலிஸார் டிப்பர் வாகனத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூடு காரணமாக, டிப்பர் வாகனத்தின் எரிபொருள் தாங்கி மற்றும் ரயர் என்பன பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

மேலும், டிப்பர் வாகனத்தைச் செலுத்திய சாரதி தப்பி ஓடியுள்ளதுடன், சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316-315)

### நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு

## ஒரே நாளில் 779 பேர் கைது

(கொழும்பு)


நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 779 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், 28 ஆயிரத்து 526 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், 11 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 257 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 177 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மது போதையில் வாகனம் செலுத்திய 441 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 60 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,039 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)




வடக்கு மற்றும் தெற்கை இணைக்கும் தனித்துவமான கலாசார பொங்கல் விழா யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி வளாகத்தில் கடந்த 30 ஆம் திகதி கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சிவனேசன் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மீட்கப்படும் சோழர்கால பொக்கிஷங்கள் இந்தியாவிடம் மீள ஒப்படைக்கும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஸ்மித் சோனியன் தேசிய ஆசியக் கலை அருங்காட்சியகம் இந்தியாவில் இருந்து களவாடப்பட்ட மூன்று வெண்கலச் சிலைகளை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைப்பதாக அறிவித்துள்ளது.

இந்தச் சிலைகள் இந்திய ஆலயங்களில் இருந்து சட்டவிரோதமாக கடத்தப்பட்டவை என்பது விரிவான ஆய்வுகளுக்குப் பின்னர் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிடம் கையளிக்கப்படவுள்ள சிலைகளில் நடராஜர் சிலை ஒன்று சோழர் காலத்தில், கிறிஸ்துவிற்கு பின்னர் 990 ஆம் ஆண்டை சேர்ந்தது என அடையாளம் காணப்பட்டுள்ளது. அதே போன்று சோமஸ்கந்தர் சிலை சோழர் காலம், 12ஆம் நூற்றாண்டை சேர்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மூன்றாவது சிலை சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் பரவை நாச்சியார் சிலை என்பன விஜய நகர காலத்தை சேர்ந்தது என்பதுடன் 16 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது என நிபுணர்கள் ஆய்வு செய்துள்ளனர்.

இந்த சிலைகளில் நடராஜர் சிலையை மட்டும் நீண்டகால கடனாகத் தன்னிடம் வைத்திருக்க இந்திய அரசாங்கத்துடன் அருங்காட்சியகம் ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது.

தெற்காசியக் கலைப் பொருட்கள் குறித்த தனது சேகரிப்புக்களை முறைப்படி ஆய்வு செய்தபோது, குறிப்பிட்ட இந்த மூன்று சிலைகளின் பின்னணியில் வர்த்தக முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக அருங்காட்சியகம் கண்டறிந்துள்ளது.

குறிப்பிட்ட இந்த சிலைகள் அனைத்தும் முன்னர், ஆலயங்களில் திருவிழாக்களின் போது ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும் புனிதப் பொருட்களாக இருந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## சுரங்கம் இடிந்து

## 200இற்கும் மே

### மத்திய ஆ

(கொங்கோ)

**மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள் கிழக்கு கொங்கோவில் சுரங்கம் ஒன் இடிந்து விழுந்த விபத்தில் 200இற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதா வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்து ளன.**

இப்பகுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பகுதியாகும் என்பதுடன், அவர்களால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் பேச்சாளர் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோமா நகரிலிருந்து வடமேற்கே சுமார் 60 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்தச் சுரங்கம் கடந்த புதன்கிழமை இடிந்து விழுந்தது.

இந்த நிலச்சரிவில் சுரங்கத் தொழிலாளர்கள், குழந்தைகள் மற்றும் சந்தைப் பெண்கள் உட்பட

## போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி காஸாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்


### 31 பேர் உயிரிழப்பு

(காஸா)

கடந்த ஒக்டோபர் 10 ஆம் திகதி ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, இஸ்ரேல் காசா பகுதியில் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 31 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் 6இற்கும் மேற்பட்ட குழந்தைகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களின் சிகிச்சைக்காகக் காஸாவிற்கும் எகிப்திற்கும் இடையிலான ரஃபா எல்லை இன்று திறக்கப்படவுள்ள நிலையிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.




போர் தொடங்கிய பின்னர் முதன்முறையாக இந்த எல்லை திறக்கப்படுவது ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்களுக்கு ஒரு முக்கிய நிகழ்வாக எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை, இஸ்ரேலிய விமானப்படையினர் காஸா நகரில் உள்ள குடியிருப்புக்கள், பொலிஸ் நிலையம் மற்றும் கான் யூனிஸ் பகுதியில் உள்ள அகதிகள் முகாம் ஆகியவற்றைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

மேலும், ஹமாஸ் அமைப்பு போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறிச் செயற்பட்டதாலேயே, அதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (3)

## உலக நாடுகளிடம் கைகே பெரும் அவமானமாக

### பாகிஸ்தான் பிரதமர்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டின் நிதி நிலை மிகக் கடுமையாக சிக்கலுக்குள்ளாகியுள்ள நிலையில், அந்நாட்டுப் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், இராணுவத் தளபதி ஆசிம் முனீர் ஆகியோர் உலக நாடுகளுக்கு நிதி உதவிக்காக சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார்கள்.

இதன் பின்னணி குறித்து பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், "மற்ற நாடுகளிடம் நிதி கேட்டு நிற்பது நமது சுயமரியாதைக்கு பெரும் சுமையாகும். இது நமக்கு மிகவும் அவமானமானது" என தெரிவித்து, நிதி தொடர்பான பிரச்சினையின் உண்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...து வீழ்ந்து கோர விபத்து
# ...மற்பட்டோர் உயிரிழப்பு

## ...ஆபிரிக்காவில் சோகம்

...துள்ள
...ஒன்று
...ற்கும்
...தாக
...த்துள்



200இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.


காயமடைந்த 20 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலி எண்ணிக்கை இன் னும் அதிகமாக வாய்ப்பு இருப்பதாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

கோல்டன் கனிமத்தை வழங்கும் முக்கிய சுரங்கமாக கருதப்படும் ருபாயா சுரங்கத்திலேயே இந்த துரதிஷ்டவசமான விபத்து நிகழ்ந்துள்ளது.

உலகிற்குத் தேவையான கோல்டன் கனிமத்தில் சுமார் 15 வீதம் இந்த ருபாயா சுரங்கத்திலிருந்தே உற்பத்தி செய்யப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (3)

# தனியார்மயமாக்கப்பட்ட வெனிசுலாவின் எண்ணெய் வளம்



(கராகஸ்)

வெனிசுலாவில் அதிரடி மாற்றமாக எண்ணெய் துறையை தனியார்மயமாக்கும் புதிய சட்டத்தில் அந்நாட்டு இடைக்கால ஜனாதிபதி டெல்சி ரோட்ரிகஸ் கையெழுத்திட்டுள்ளார்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலா, உலகிலேயே மிகப்பெரிய கச்சா எண்ணெய் வளம் கொண்ட நாடு.

இந்த வகையில், வெனிசுலாவின் எண்ணெய் துறையை தனியார்மயமாக்கும் சட்டத்தில் அந்நாட்டு ஜனாதிபதி டெல்சி ரோட்ரிகஸ் கையெழுத்திட்டுள்ளார்.

இதன் வாயிலாக பி.டி.வி.எஸ்.ஏ என்ற அரசுக்கு சொந்தமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனத்தின் ஏகபோக உரிமை முடிவுக்கு வருகிறது.

புதிய சட்டத்தால், தனியார் நிறுவனங்கள் எண்ணெய் உற்பத்தி, விற்பனை, விலை நிர்ணயம் உள்ளிட்டவற்றில் முழு கட்டுப்பாட்டை பெற முடியும்.

இந்த சட்டம் கொண்டு வரப்பட்ட உடனேயே, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெனிசுலாவின் எண் ணெய் வர்த்தகத்தின் மீதிருந்த தடைகளை நீக்கி னார்.

அமெரிக்க எரிசக்தி நிறுவனங்கள் வெனிசுலாவில் கால் பதிப்பதற்கான வாய்ப்புகள் திறந்து விடப்பட்டுள்ளன. (3)

# ...கயேந்துவது
# ...க உள்ளது

நிலையை வெளிப்படுத்தியுள்ளார்.

பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இஸ்லாமாபாத்தில், ஏற்றுமதியாளர்களுடன் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இது போன்ற கருத்துகளை வெளிப்படுத்திய தாகவும், நிதி நிலைமையை எதிர்கொள்வதற்கான நடைமுறைகளை விவாதித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் குறிப்பிட்டதாவது, தற்போதைய நிலையில் பாகிஸ்தானின் அந்நியச் செலாவணி கையிருப்பு முன்னேற்றம் காணப்பட்டாலும், உலக நாடுகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் நிதி உதவிகளும் இதில் அடங்கியுள்ளன.

இருப்பினும், கடன் பெறும் போது "மற்றவரிடம் தலை குனிந்து நிற்க வேண்டும்" என்பது அவர்களுக்கு பெரும் வெட்கத்தை உண்டாக்கும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் ஆசிம் முனீருடன் சேர்ந்து நிதி பெறுவதற்காக உலக நாடுகளுக்கு செல்வதை அவமானமாகக் கருதுகிறோம். கடன் வாங்குவது நமது சுயமரியாதை க்கு பெரும் சுமையாகும். வெட்கத்தால் எங்கள் தலைகள் குனிகின்றன. ஆனால், சில நேரங்களில் அவர்கள் செய்யச் சொல்லும் விடயங்களுக்கு நாங்கள் மறுப்பு தெரிவிக்க முடியாமல் இருக்கிறோம்" என்று பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் நிதி நிலை குறித்து அவர் வெளியிட்ட இந்தக் கருத்துகள், தற்போது அந்த நாட்டில் நடந்து வரும் நிதி சிக்கல்கள், கடன் பெறுதல் மற்றும் உலக நாடுகளுடன் உள்ள தொடர்புகளை பொது மக்களுக்குச் சுட்டிக் காட்டுகிறது. (3)

## நிதிநிலை சரியும் அபாயம்

# ஐ.நா உறுப்பு நாடுகளுக்கு


## அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரிக்கை!

(வோஷிங்டன்)

அவசர நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், உடனடியாக நிதிச்சரிவை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது என்று ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெ ரெஸ் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் "அனைத்து உறுப்பு நாடு களும் தங்கள் கடமைகளை முழுமையாகவும் சரியான நேரத்திலும் நிறைவேற்ற வேண்டும் அல்லது உடனடி நிதிச் சரிவைத் தடுக்க, உறுப்பு நாடுகள் நமது நிதி விதிகளை மாற்றி அமைக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், கடிதத்தில் எந்தவொரு நாட்டையும் குறிப்பிடவில்லை. ஐ.நாவுக்கு அதிக நிதி வழங்கும் நாடாக அமெரிக்கா உள்ளது.



அமெரிக்கா தற்போது ஐ.நாவின் வழக்கமான வரவு செலவுத் திட்டத்திற்கு 2.16 பில்லியன் அமெரிக்க டொலர் வழங்க வேண்டும். மேலும் இந்த ஆண்டுக்கு 767 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க வேண்டியுள்ளது.


வெனிசுலா 38 மில்லியன் டொலர் செலுத்த வேண்டியுள்ளது. தற்போது வெனிசுலா பொருளாதார சிக்கலில் மாட்டியுள்ளது.

அமெரிக்கா 2025 இறுதியில் 1.568 பில்லியன் டொலர் செலுத்த வேண்டியுள்ளது.இது 2024ஆம் ஆண்டைவிட இரண்டு மடங்கு என அன் டோனியா குட்டெரெஸ் தெரிவித்துள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 15 ஆயிரம் பேர் வேறு துறைகளுக்கு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

இலங்கை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த 15 ஆயிரம் பணியாளர்களை வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் பொலிஸ் திணைக்களங்களுக்கு மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும், குறித்த திணைக்களம் கலைக்கப்படமாட்டாது எனவும் பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெளிவுபடுத்தியுள்ளார்.

திணைக்களத்தின் 32 ஆயிரம் பணியாளர்களில் சுமார் 15 ஆயிரம் பேர் தற்போது புதிய கடமைகளுக்காக வேறு திணைக்களங்களுக்கு மாற்றப்படுகின்றனர். இதில் 5 ஆயிரம் அதிகாரிகள் வன உத்தியோகத்தர்களாக மாற்றப்படுவதோடு 10 ஆயிரம் அதிகாரிகள் பொலிஸ் திணைக்களத்தில் பாதுகாப்பு மற்றும் காவல் பணிகளுக்காக இணைக்கப்படவுள்ளனர்.

தற்போது பொலிஸ் துறையில் நிலவும் 30 ஆயிரம் பணியாளர் வெற்றிடங்களை நிரப்ப இது உதவியாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>12 இல் செவ்<br>கி.பா: 30<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc, Teacher<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16354 | பிறப்பு: 1989 RC<br>நட்சத்திரம்: பூசம்<br>2 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, MA<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16398 |
| பிறப்பு:1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>10 இல் சூரி செவ்<br>கி.பா:11 1/4<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: Dip in Civil Engineering, MA<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/16356 | பிறப்பு: 1989 RC<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:65<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, Cleark<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15679 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>2 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, Swiss<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16358 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor.<br>எதிர்பார்ப்பு : Doctor, Engineer, Lecturer, Lawyer<br>தொ.இ: G/15015 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>7 இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி,UK<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/16359 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 37<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor.<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Lawyer<br>தொ.இ: G/15014 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: 36<br>1 இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L, Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16361 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>7 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்-BSc, Accountant (London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15686 |

இல. 144, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 534

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## கல்விக்குக் கரையில்லை!

"என்ன சார்? எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டு வந்தார் என் நண்பர். "வாங்க, உட்காருங்கள்... ஏது இந்தப் பக்கம்... அதுவும் இந்த நேரத்திலே?" அப்படி என்றேன். "உங்களிடம் வந்தால் ஏதாவது சொல்லுவீர்கள் கேட்கலாம்! என்று நினைத்து வந்தேன்!" என்றார். "பெரியவர்கள் எல்லாம் இப்படித்தான் சார் இருந்திருக்கிறார்கள்!" என்றேன்." "எப்படி?" என்றார்.

"எத்தனை நாள் வாழ்வேனோ அத்தனை நாளும் ஏதாவது கற்றுக்கொண்டே இருப்பேன்!" அப்படி என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்லியிருக்கிறார். இதை ஞாபகப்படுத்துகிற மாதிரி சுவாமி ராமதீர்த்தருக்கு ஒர் அனுபவம் ஏற்பட்டது!" என்றேன்.

"விபரமாக சொல்லுங்கள்" என்றார். சொல்ல ஆரம்பித்தேன்.

சுவாமி ராமதீர்த்தர் ஒரு தடவை கப்பலிலே ஜப்பானுக்குப் போய் கொண்டிருந்தார். அதே கப்பலிலே இன்னொரு ஜப்பான்காரரும் போய்கொண்டிருந்தார். அந்த ஜப்பான்காரருக்கு 90 வயதுக்கு மேலே இருக்கும். ரொம்ப வயதானவர். கை, கால் எல்லாம் ஒரே நடுக்கம். அது இஷ்டத்துக்கு ஆடிக்கொண்டிருந்தது. உடம்பும் ரொம்ப பலவீனமாக தெரிந்தது! வயதாகி விட்டால் அப்படித்தானே! அந்த முதியவரும் அந்த நிலைமையிலேதான் இருந்தார். நிலைதான் அந்த அளவுக்கு இருக்கிறதே... அவர் பேசாமல் ஒரு மூலையிலே படுத்து கொண்டு வர வேண்டியதுதான்! ஆனால் அவர் அப்படி செய்யவில்லை!

என்ன செய்து கொண்டு வந்தார் தெரியுமா? ஒரு மொத்தமான கண்ணாடியை போட்டுக்கொண்டார். சீன மொழியிலே ஏதோ ஒரு பாடத்தை திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு எழுதிக் கொண்டிருந்தார். கையோ நடுங்கிக்கொண்டிருந்தது. பார்வையோ சரியில்லை.. இந்த நிலைமையிலே இது அவருக்குத் தேவையா? சுவாமி ராமதீர்த்தருக்கு இது கொஞ்சம் வித்தியாசமாக தெரிந்தது. ஆச்சரியப்பட்டார்.

"பெரியவரே! இவ்வளவு தீவிரமாக என்னமோ செய்து கொண்டிருந்தீர்கள்.. என்ன அது?" என்று கேட்டார்,

"சீனமொழியை கற்க வேண்டும் என்று தோன்றியது! எழுதிப் பார்த்தால் மொழிப் பயிற்சி கிடைக்கும். அதனாலே அந்த மொழியிலே எழுதிப் பழகுகிறேன்!" என்றார்!

"மற்றைய மொழிகளைவிட அந்த மொழி ரொம்பவும் கடினமானது என்று கேள்விப்பட்டேன்!" என்றார் இவர்.

"கடினமானது என்பதற்காக அதை கற்கக்கூடாது என்பது இல்லையே!" என்றார் அந்தப் பெரியவர்.

"இந்த மொழியை முழுதாக கற்க வேண்டும் என்றால் வருடக்கணக்கிலே ஆகுமே! உங்களுக்கோ கையும் காலும் சொன்னபடி கேட்கமாட்டேன் என்கிறதே" என்றார் சுவாமிஜி.

"அப்படி என்றால் நான் சீனமொழியை கற்றுக் கொள்கிற முயற்சியை கைவிட்டு விட வேண்டும் என்கிறீர்களா?" என்றார் பெரியவர்.

"நான் அப்படியெல்லாம் உங்களுக்கு யோசனை சொல்லலாமா? ஆனால், ஒன்று மட்டும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்!" என்றார்.

"என்ன?" என்று கேட்டார். "இப்படியெல்லாம் செய்யவேண்டும் என்று உங்களைத் தூண்டியது எது என்பதை மட்டும் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்!" என்றார்.

காகிதத்தை மடித்து ஒரு பக்கமாக வைத்து விட்டு அந்தப் பெரியவர் சொன்னார்.

"நான் உயிரோட இருக்கிறவரைக்கும் ஒன்று இல்லை என்றால் ஒன்று என்று ஏதாவது புதிதாக ஒன்றை கற்றுக்கொண்டு இருக்க வேண்டும்! இதுதான் என் ஆசை!" என்றார்.

"ஆனால், உங்கள் உடல்நிலை புதிதாக கற்றுக்கொள்கிற முயற்சிக்கு சாதகமாக இல்லை போல இருக்கிறதே!" என்றார்.

"அட, வாழ்க்கை என்பது தான் என்ன? ஆதி அந்தமில்லாத, தங்குதடை இல்லாத ஒரு பிரவாகம் அது. ஓயாமல் பிரவகிக்கிற வாழ்க்கை நீரோட்டத்தின் ஊடே ஒவ்வொரு கணமும் புதிதாக ஏதாவது ஒன்றை அறிய, ஒன்றை கண்டுபிடிக்க, ஒரு சிந்தனையில் லயிக்க வாய்ப்பு கிடைத்தால் அதை கைநழுவ விடக்கூடாது!" என்றார் அந்த முதியவர்.

இப்போதுதான் சுவாமி ராமதீர்த்தருக்கு ராமகிருஷ்ணர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது "எத்தனை நாள் வாழ்ந்தேனோ அத்தனை நாளும் ஏதாவது கற்றுக் கொண்டே இருப்பேன்!" என்று சொன்னாரே... அது!

இப்படி நான் சொல்லி முடித்ததும், எதிரிலே இருந்த என் நண்பர் சொன்னார். "எனக்கும் கூட அப்படித்தான். புதிது புதிதாக ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசை. அது தான் உங்களிடம் வந்தேன்!" என்றார்.

எனக்கு ரொம்ப பெருமையாக இருந்தது! "இன்றைக்கு என்னிடம் வந்ததினாலே புதிதாக என்ன தெரிந்து கொண்டீர்கள்? என்று கேட்டேன். "புதிதாக எதையாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் இனிமேல் உங்களைத் தேடி வரக்கூடாது என்று தெரிந்து கொண்டேன்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அகத்தியர்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இன்றும் அகத்தியர் வாழும் புண்ணிய பூமி இலங்கை. அகத்தியரின் தடங்கள் இன்றும் இலங்கையில் திருகோணமலையில் காணப்படுகிறது.

இலங்கை சிவபூமி அகத்தியர் ஆலயம் தான் இது. திருமலை மாவட்டம் மூதூர் கங்குவேலியில் இருந்து ஐந்து கிலோமீற்றர் மேற்கேயுள்ள வனப் பகுதியில், மகாவலி கங்கைக்கு அருகில் அமைந் திருந்த அகத்தியர் தாபனத் திற்கு ஆடி அமாவாசைக் காலத் தில் சைவ மக்கள் சென்று வருவது வழமை. இவர்களை விட இங்கு சேனைப்பயிர்ச்செய்கையாளர்களும், விறகுத் தொழிலாளர்களும் அடிக்கடி சென்று வருவதுண்டு.

இங்கு அமைந்திருந்த கற்தூண்களும், அகத்தியர் ஆலயமும், சிவலிங்கமும், ஈழத்தை முதன் முதலாக சோழர்கள் ஆட்சி செய்வதற்கு முன்னரே (2500 ஆண்டுகளுக்கு முன்னர்) நிறுவப்பட்டமைக்கான வரலாற்று சான்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேயிடத்தில் 18ஆம் நூற்றாண்டில் 2ஆவது அகத்தியர் தமிழ் பல்கலைக்கழகம் இயங்கியமைக்கான வரலாற்றுத் தடயங்களும் காணப்பட்டன.

திருக்கரசுப் புராணத்தின் படி, கைலையில் சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் திரு மணம் இடம்பெற்ற பொழுது, கைலைமலை சரிந்ததாக வும், இதனைச் சீர்செய்யும் நிமித்தம் ஈழத்தின் திரு மலைக்கு அகத்திய முனிவரை சிவபெருமான் அனுப்பி வைத்ததாகவும் கூறப்படுகின் றது.

இதன்படி திருமலையை சென்றடைந்த அகத்தியர். அங்குள்ள கங்குவேலிப் பகுதியில் சிவலிங்கம் அமைத்து, தனது தவ வலிமையால் கைலை மலையை வழமைக்கு கொண்டு வந்ததோடு, அங்கிருந்தவாறே சிவன்-பார்வதி திருமணத்தை தரிசித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் திருமலையில் வாழ்ந்த அகத்திய முனிவர் தற்பொழுது மாவிலாறு என்று அழைக்கப்படும் அகத்தியனாற்றில் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தியதாகவும் ஐதீகங்கள் கூறுகின்றன.

தமிழ்க் கலைகள் அறுபத்தி



நான்கும் அகத்தியரால் இங்கு போதிக்கப்பட்டவையாகும். அகத்தியத் தாபனம் பல்கலைகளையும் போதித்து வந்துள்ளது.

திருமங்கலாய் தொடங்கி மூதூர் துறை மகாவலி வரை மகாவலி ஆற்றுக்கு கிழக்கே கங்கை வெளி பரந்து காணப்பட்டது. இன்று கங்குவேலி என்று பெயர் குறுகிவிட்டது. உலகில் முதலில் நாகரீகம் தோன்றியது இங்கே தான் என மூதூர் அகத்தியர் என்ற ஆய்வு நூலில் கூட குறிப்பிடப்பட்டுள்ளது. கங்குவேலியிலுள்ள அகத்தியத் தாபனம் அழிந்த பின்னரும், வழிபாட்டுத் தலமாக சிவலிங்கம் காட்சியளித்தது. அத்துடன் அகத்தியத்தாபனத்தின் வாயில் படிகள், சந்திர வட்டக்கல் உட்பட கல்வெட்டுக்கள் என்பன போர் முடிவடைந்த பின்னர் சமாதானச் சூழல் நிலவுகிறது எனக் கூறப்படும் காலத்தில் தான் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. ஈழ நாட்டில் அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள், நூல்கள், வரலாற்றுச் சுவடுகள் அதிகம் காணப்படுகின்றன.

இந்தியாவில் காணப்படும் தமிழரின் வரலாற்றுக் காலத்துக்கு இவை முற்பட்டவையாகும். தமிழ்ப் பேரவைக்கால நூல்களில் முத்தூர் அகத்தியர் என்று தம்மைத் தாமே அறிமுகப்படுத்தியுள்ளமையை நாம் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. அகத்தியர் ஈழத்தில் திருகோணமலையில் பல்லாண்டுகள் காலம் வாழ்ந்துள்ளார் என்பதை அவர் பணிகளாலும், நூல்களாலும் அறிய முடிகின்றது.

திருமங்கலாய்ச் சிவன் கோயில், அகத்தியத் தாபனம், திருக்கரசைச் சிவன் கோயில் என்பவற்றை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். இதன் மூலம் திருகோணமலையின் தமிழரின் வரலாறு, வரலாற்றுக் காலங்களுக்கு முற்பட்டது என்பதை உறுதி செய்ய முடிகின்றது.

அகத்தியர் சப்தரிஸிகளில் ஒருவராகவும், சித்தர்களில் முதன்மையானவராகவும் தமிழுக்கான முனிவர் என்றும், சித்த மருத்துவமுறைகளை வழங்கிய முனிவர் என்றும் குறிப்பிடப்படுகிறார்.

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் (திருகோணமலைப் பட்டினத்தில் இருந்து 23 மைல் தொலைவில்) அமைந்துள்ள வரலாற்றுப் பெருமை மிக்க கங்குவேலி (திருக்கரைசையம் பதி) கிராமத்தில் மகாவலி கங்கைக் கரையில் அகத்தியத் தாபனம் அமைந்திருக்கிறது.

அகத்தியத் தாபனம் தொடர்பாக 2001 ஆம் ஆண்டில் பேரறிஞர்.க. பாலசுப்பிரமணியம் அவர்களால் வெளியிட்டப்பட்ட ஆய்வு நூல் மகாசித்தர முத்தூர் அகத்தியர் என்பதாகும்.

வரலாற்றுத் தொன்மை வாய் ந்த அகத்தியத் தாபனம் தொடர்புடைய புகைப்படங்கள் சில மகாசித்தர் முத்தூர் அகத்தியர் என்னும் ஆய்வு நூலிலுள்ளது.

**அகத்தியர் அறிவுரை!**

**“பொறுத்திரு! எல்லாவற்றுக்கும் காரணம் உண்டு.
அதைப் புரிந்து கொள்ளும் சக்தி உனக்கேதடா
பாவத்தை செய்தவன் சந்தோசமாக இருக்கிறான்
என்று எண்ணாதே. அவனுக்கு பகவான்
எந்தசமயத்தில் எப்படி தண்டனை தருவார்
என்பது யாருக்கும் தெரியாது.
சித்தர்களும், முனிவர்களும் தான்
இதனை முன் கூட்டியே அறிவார்கள்.
ஒரு நல்லவனை, ஒரு தீயவன் ஏமாற்றுகிறான்
என்றால், நல்லவனின் பாவத்தை
எடுத்துக் கொண்டு, தீயது செய்கின்றவன் தன்னிடம்
இருக்கின்ற சிறிதளவு புண்ணியத்தை அந்த
நல்லவனிடம் ஒப்படைக்கின்றான் என்று பொருள்”.**

இந்தக் கருத்தை மனதில் வைத்துக்கொண்டு உலகில் அனைத்தையும் பார்க்கப் பழகிவிட்டால், அனைத்தும் மிக எளிதாக, மிக நீதியாகத் தோன்றும்.

# இராசிபலன்

02.02.2026
தை 19, திங்கட்கிழமை
பிரதமை பின்னிரவு 3.42 மணிவரை

ஆயில்யம் பின்னிரவு 12.32
சுப நேரம் 12.36 - 2.06 மணிவரை
இராகு காலம் 08.06 - 09.36 மணிவரை

சந்திராஷ்டமம்
மூலம்,பூராடம்

**வளவன்**



**மேஷம்**
அழகுசாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



**கடகம்**
விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்,



**துலாம்**
தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப சுகம் கூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.



**மகரம்**
அடிப்படை வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.



**ரிஷபம்**
தொழில் போட்டிகள் மாறும், வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும்.



**சிம்மம்**
காரிய அலைச்சல்கள் சற்று கூடும், சுப செயற்பாடுகளில் தாராளம் காட்டுவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.



**விருச்சிகம்**
வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு,



**கும்பம்**
கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் இடம்பெறலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று நடைபெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.



**மிதுனம்**
சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.



**கன்னி**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**தனுசு**
தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், ரோக பயமுண்டு.



**மீனம்**
வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அதற்கு பயிற்சி அவசியம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 4
# பொன்னியின் செல்வன்
## காவியத் தொடர் 968





அவனுடைய யுக்தி பலித்தது. பன்றி மூர்க்காவேசத்துடன் அவன் ஏறியிருந்த மரத்தை நோக்கிப் பாய்ந்து வந்தது.

"வரட்டும் வரட்டும் வந்து மரத்தின் பேரில் முட்டிக் கொள்ளட்டும்" என்று வந்தியத்தேவன் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, அவன் ஏறி உட்கார்ந்து உலுக்கிய மரக்கிளை மடமட வென்று முறிந்தது. கடவுளே! இது என்ன ஆபத்து? கிளையுடன் தரையில் விழுந்தால்? அடுத்த நிமிடமே பன்றியின் கோரப் பற்கள் அவனைச் சின்னா பின்னமாகக் கிழித்துவிடும். வேறு கிளை ஒன்றைத் தாவிப் பிடித்துக் கொண்டால் தான் பிழைக்கலாம். அப்படித் தாவிப் பிடிக்க முயன்றான்.

பிடிக்க முயன்ற கிளை சற்றுத் தூரத்தில் இருந்தபடியால் ஒரு கை மட்டுந்தான் பிடித்தது. பிடித்த கிளை மெல்லியதாயிருந்தபடியால் வளைந்து கொடுத்தது. கைப்பிடி நழுவத் தொடங்கியது, கால்கள் ஊசலாடின! சரி! கீழே விழ வேண்டியது தான், உடனே மரணந்தான்! சந்தேகமில்லை.

ஏதோ, கடைசியாக ஆதித்த கரிகாலரைக் காப்பாற்ற முடிந்தது அல்லவா? இளைய பிராட்டி இதை அறியும் போது மகிழ்ச்சி அடைவாள் அல்லவா? தன்னுடைய மரணத்துக்காக ஒரு துளி கண்ணீர் விடுவாள் அல்லவா?

ஏதோ ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது! அதே சமயத்தில் கைப்பிடியும் நழுவி விட்டது! வந்தியத்தேவன் கண்களை இறுக மூடிக் கொண்டான். தடால் என்று கீழே விழுந்தான், விழும் போதே நினைவை இழந்தான்.

வந்தியத்தேவன் நினைவு வந்து கண் விழித்துப் பார்த்த போது ஆதித்த கரிகாலர் அவன் முகத்தில் தண்ணீர் தெளித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். சட்டென்று நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து, "இளவரசே! பிழைத்திருக்கிறீர்களா?" என்றான்.

"ஆமாம் உன்னுடைய தயவினால் இன்னும் பிழைத்திருக்கிறேன்" என்றார் ஆதித்தகரிகாலர்.

"காட்டுப்பன்றி என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

"அதோ! என்று இளவரசர் சுட்டிக் காட்டிய இடத்தில் காட்டுப்பன்றி செத்துக் கிடந்தது.

வந்தியத்தேவன் அதைச் சற்று உற்றுப் பார்த்துவிட்டு, "அரசே! இவ்வளவு சின்ன உருவமுள்ள பிராணி என்ன பாடுபடுத்தி விட்டது? கந்தமாறன் காட்டுப் பன்றியைக் குறித்துச் சொன்னது அவ்வளவும் உண்மை தான். கடைசியில் அதை எப்படித்தான் கொன்றீர்கள்?" என்று கேட்டான்.

"நான் கொல்லவில்லை உன்னுடைய வேலும் நீயுமாகச் சேர்ந்துதான் கொன்றீர்கள்!" என்றார் இளவரசர்.

வந்தியத்தேவன் அதன் பொருள் விளங்காதவனைப் போல் இளவரசரின் முகத்தைப் பார்த்தான். "என்னுடைய வேலைத் தாங்கள் நன்றாக உபயோகப்படுத்தியிருக்கிறீர்கள்!


(தொடரும்...)

---



# சிறுவர் அரங்கம்

## நல்லதும் கெட்டதும்



ஜப்பான் நாட்டில் புத்த துறவியாகப் பாங்கே என்பவர் இருந்தார். அவர் மக்களுக்குத் தியானம் செய்வதைப் பற்றி அவ்வப்போது பயிற்சி வகுப்புகள் நடத்தி வந்தார்.

இதில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல பகுதிகளிலிருந்து பலர் வந்தனர். இப்படி வந்தவர்களில் ஒருவன் திருடுவதை மற்றவர்கள் கையும் களவுமாகப் பிடித்து விட்டனர். அவனை நேராகத் துறவியிடம் அழைத்துச் சென்று "இவனை உடனே இங்கிருந்து அனுப்பி விடுங்கள்" என்று சொன்னார்கள்.

ஆனால் துறவி பாங்கே இந்த நிகழ்ச்சியைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை. அவனை அப்படியே விட்டு விட்டார்.

மீண்டும் திருட முயலும் போது பிடிபட்ட அவன் துறவியிடம் இழுத்து வரப்பட்டான். இம்முறையும் அவர் அவனை விட்டு விட்டார்.

இதைக் கண்டு எல்லோரும் கோபம் கொண்டனர். "ஒன்று நாம் தங்க வேண்டும். இல்லையேல் இந்தத் திருடன் இங்கிருக்க வேண்டும்" என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

தங்கள் கருத்தை ஓர் ஓலையில் எழுதி அதில் எல்லோரும் கையொப்பம் இட்டனர். அந்த ஓலை யைத் துறவியிடம் தந்து விட்டு அவர் பதிலை எதிர் பார்த்து நின்றார்கள்.

அதைப் படித்துப் பார்த்த துறவி, "நீங்கள் அறிவுள்ளவர்கள். உங்களுக்கு நல்லது எது, கெட்டது எது என்று தெரிந்து உள்ளது. நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

நீங்கள் விரும்பிய யாரிடம் வேண்டுமானாலும் படிக்கலாம். ஆனால் இவனைப் பாருங்கள். இவன் நிலை பரிதாபமானது. இவனுக்கு நல்லது எது, கெட்டது எது என்று இன்னும் புரியவில்லை. நான் கற்றுத் தரவில்லை என்றால் யார் இவனுக்குக் கற்றுத் தருவார்கள்? நீங்கள் எல்லோரும் என்னை விட்டுப் போனாலும் சரி, நான் இவனை வைத்துக் கொள்ளப் போகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட அத் திருடனின் கண்களிலிருந்து தாரைதாரையாய்க் கண்ணீர் வழிந்தது. திருடும் எண்ணம் அவன் உள்ளத்தை விட்டு மறைந்தே போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்து கொள்ளுங்கள்.
>
> - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாண நகர அபிவிருத்தி ஆரியகுளம் போல் ஆகிவிடுமா?

யாழ்ப்பாண நகரை அழகும் அபிவிருத்தியும் செய்வது தொடர்பில் நேற்று (01) இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

2026இல் யாழ்ப்பாண நகரை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்திருந்ததையொட்டி, அவ்விடயத்துடன் தொடர்புபட்ட சிலவற்றைப் பிரஸ்தாபித்திருந்தோம்.

யாழ்ப்பாண நகர அபிவிருத்தி என்பது சாத்தியமாகக்கூடிய ஏதுக்கள் உண்டு.

இங்கு நகர அபிவிருத்தி எனும்போது கட்டுமானங்கள், பொதுமக்களுக்கான வசதிகள், வர்ணப்பூச்சுக்கள், கழிவகற்றல் முகாமைத்துவம் எனப் பல்வேறு விடயங்கள் அடங்குகின்றன.

இங்குதான் அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டவற்றைப் பராமரிப்பதும் அதனைத் தொடர்ந்து பாதுகாப்பதும் முக்கியம் பெறுகின்றன.

ஆம், யாழ்ப்பாண நகரை அபிவிருத்தி செய்தல் என்ற திட்டத்தின் கீழ் பொதுக் கழிப்பறைகள் அமைக்கப்பட்டால், அதனைத் தொடர்ந்து பராமரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அதாவது யாழ்ப்பாண நகர அபிவிருத்தி எனும் வேலைத்திட்டம் வெற்றி அளிக்க வேண்டுமாயின், அங்கு முதன்மைக்குரிய விடயமாகப் பராமரிப்பு என்பது அமையும்.

எனினும் தமிழர்களாகிய நாம் பராமரிப்பு என்பது பற்றி இம்மியும் சிந்திப்பதில்லை.

உண்மை. எங்கள் வடக்கு மாகாணத்தில் அமையப்பெற்ற எத்தனையோ பொதுக்கட்டடங்கள் மற்றும் பொது நோக்கு மண்டபங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள் என்பன பராமரிப்பு இன்றி அத்தனையும் பாழடைந்து போவதைக் காண முடிகிறது.

உதாரணத்துக்கு யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தல் எனும் நோக்கில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டது.

அதற்கான நிதியை யாழ்ப்பாணத்தில் உள்ள தியாகி அறக்கொடையின் இயக்குநர் வழங்கியிருந்தார்.

யாழ்.மாநகர சபையின் முதல்வராக இருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் அவர்களின் தலைமையில் ஆரியகுளப் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, மிகச் சிறப்பான முறையில் அதன் திறப்பு விழாவும் இடம்பெற்றது.

மக்கள் அங்கு கூடினர். சாலையோர சிறு வர்த்தகர்களும் அங்கு தமது வியாபாரத்தைத் தொடங்கினர். ஆரியகுளம் அழகு பெற்றது. மனதுக்கு மகிழ்வைத் தந்தது.

ஆனால் இப்போது அந்த ஆரியகுளத்தின் நிலை என்ன என்று பார்க்கும்போதுதான் **"பராமரிப்பு"** என்ற விடயத்தில் எம்மிடம் இருக்கக்கூடிய அசமந்தம் கோடிக்கணக்கான ரூபாய்களில் அமையப்பெற்ற கட்டடங்களையும் புனரமைப்புப் பணிகளையும் வீணாக்கி விடுகிறது என்பதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம்.

எனவேதான் யாழ்ப்பாண நகர அபிவிருத்தியும் ஆரியகுளம் போல் ஆகிவிடாமல், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

# கடந்தகால அரசியல் கலாசாரத்தால் நீர்ப்பாசனக் கட்டமைப்பு சிதைக்கப்பட்டது

## அமைச்சர் கே.டி. லால்காந்த சுட்டிக்காட்டு

சில அதிகாரிகள் அரசியல் அழுத்தங்கள் காரணமாக சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தயங்கினர். தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக் கருதி அவர்கள் அமைதியாக இருந்து விட்டனர். ஆனால் அதிகாரிகள் சரியாகச் செயற்பட்டிருந்தால் விவசாய நிலங்களை எவரும் நிரப்பியிருக்க முடியாது என்று அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்படும் காலநிலை மாற்றத்திற்கு இசைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் ஓர் அங்கமாக, எல்லங்க முகாமைத்துவக் குழுவின் பணிகளுக்கான வழிகாட்டி கையேடு விவசாய அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் கே.டி. லால்காந்த,

இந்தத் திட்டம் நாட்டுக்கு மிகவும் முக்கியமானதொரு திட்டமாகும். நாம் வளர்ந்து விளையாடித் திரிந்த எமது கிராமத்துக் குளங்களுடன் தொடர்புபட்ட இத்திட்டத்தின் மீது எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

நாட்டின் முழுமையான எல்லங்க குளக் கட்டமைப்பையும் மீள நிலைநிறுத்த வேண்டும் என்பதே எமது இலக்காகும். அதனால்தான் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் சிறிய குளங்களைப் புனரமைப்பதற்காக நாம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

எமது நீர்ப்பாசனக் கட்டமைப்பை சீர்செய்யும்போது நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் குளங்களுக்குள் அத்துமீறிய குடியேற்றங்களாகும்.

தற்போது நுவரவெள குளத்தைச் சூழவுள்ள சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். குளங்களின் எல்லைகளைக் குறிப்பீடு செய்வது எமக்கு முன்னாலுள்ள பாரிய சவாலாகும்.

கடந்த காலங்களில் மாவட்டச் செயலாளர்கள், பிரதேசச் செயலாளர்கள், விவசாய அதிகாரிகள் எனப் பல பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இருந்தனர். சட்டங்களும் இருந்தன. இவை அனைத்தும் இருந்தபோதிலும் எமது குளக் கட்டமைப்பு அழிவடைந்து போனது. கடந்த காலங்களில் நிலவிய அரசியல் கலாசாரமே இதற்குக் காரணமாகும். அரசியல் பலம் படைத்தவர்களின் தேவைகளுக்காக இவை நடந்தேறின.

எல்லங்க குளக் கட்டமைப்பையும் பிரதான குளங்களையும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்பதில் நான் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளேன். இதில் வாக்கு வங்கி அரசியல், தனிப்பட்ட நட்பு அல்லது அரசியல் செல்வாக்கு என்பவற்றுக்கு இடமில்லை.

குளங்களுக்குச் செய்யும் நீதி என்பது நாட்டுக்குச் செய்யும் மிகப் பெரிய சேவையாகும். இனிவரும் காலங்களில் இத்திட்டங்களுக்கு அரசியல் அழுத்தங்கள் இருக்காது. எனவே அதிகாரிகள் துணிச்சலுடன் செயற்பட வேண்டும் என்றார். *(ந-7)*

# இலங்கை மீனவர்கள் மீது இந்தியக் கடற்படை தாக்குதல்

புத்தளம் - வென்னப்புவ பகுதியில் இருந்து பயணம் செய்த இரண்டு படகுகளில் இருந்த 12 கடற்றொழிலாளர்கள் இந்தியக் கடற்படை அதிகாரிகள் குழுவால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் நான்கு கடற்றொழிலாளர்கள் பலத்த காயமடைந்தனர். இவர்கள் கடற்படையினரால் கராபிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த டிசம்பர் மாதம் 3ஆம் திகதி வென்னப்புவவிலிருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற "தினிதி துவ" மற்றும் மற்றொரு படகில் இருந்த கடற்றொழிலாளர்கள் சர்வதேச கடற்பரப்பில் தொழிலை முடித்துவிட்டு கடந்த 28ஆம் திகதி காலை இலங்கை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்திய கடற்படைக் கப்பலால் மறிக்கப்பட்டனர்.

குறித்த கடற்றொழிலாளர்களிடம் போதைப்பொருள் இருக்கிறதா? என்று வினவிய இந்திய கடற்படை அதிகாரிகள் அவர்களைக் கடுமையாகத் தாக்கியதாக பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே,

இந்த விவகாரம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள கடற்படை மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். *(ந-7)*

# ஏழாவது நாளாகவும் தொடரும் உணவுத் தவிர்ப்பு

*(கொழும்பு)*

7 வருடங்களாகப் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தங்களை உடனடியாக ஆசிரியர் சேவையில் உள்வாங்குமாறு கோரி, இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று (01) 7ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

முதலில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த நால்வரும் உடல் நிலை பாதிக்கப்பட்டமையினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலும் இருவர் நேற்று முன்தினம் (31) உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. *(ந-7)*

# பருத்தித்துறையில் இரத்ததான முகாம்

*(பருத்தித்துறை)*

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் காணப்படும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக பருத்தித்துறை பிரதேச சபையும் 521 ஆவது படைப் பிரிவும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை(06) பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. *(ந-7,60)*

# சிசுவின் சடலம் மீட்பு

*(நுவரெலியா)*

நுவரெலியா கிரகரி வாவியின் கரையோரத்தில் பிறந்த சிசுவொன்றின் சடலம் ஒன்று நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிரகரி வாவியில் படகு சவாரி செய்யும் ஊழியர்கள் மற்றும் உயிர்க்காப்பு பொலிஸார், நுவரெலியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து குறித்த சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த நுவரெலியா பொலிஸார் தடயவியல் பரிசோதனைகளை மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் நீதிமன்ற உத்தரவைப் பெற்று சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். *(ந-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 12

என். சொக்கன்

அமெரிக்கா அனுப்பிய பலூன்களைக் கைப்பற்றி, அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துப்போட்டு ஆராய்ந்தார்கள். சிஐஏவின் சில் மிஷங்கள் அனைத்தும் அவர்களுக்கு வெட்டவெளிச்சமாகி விட்டது.

உடனடியாக, பத்திரிகை நிருபர்களைக் கூப்பிட்டது சோவியத் யூனியன். "வானிலை ஆராய்ச்சி செய்கிறோம் என்ற பெயரில், அமெரிக்கா எங்களைத் திருட்டுத்தனமாக உளவு பார்க்கிறது" என்று ஆதாரத்தோடு நிரூபித்தார்கள்.

அதன்பிறகு, சிஐஏவுக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை. பாராசூட், பலூன்களையெல்லாம் ஓரமாக ஒதுக்கிவைத்துவிட்டு, என்ன செய்யலாம் என்று தீவிர யோசனையில் மூழ்கினார்கள்.

சோவியத் யூனியனின் அனைத்து நடவடிக்கைகளையும், துல்லியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் சிஐஏவுக்கு இருந்தது. இதில் அவர்கள் கொஞ்சம் பிசகினாலும், பேர்ள்த் துறைமுகத் தாக்குதலைப்போன்ற இன்னோர் அதிர்ச்சியை அமெரிக்கா சந்திக்க நேர்ந்து விடும்.

இதற்காக எத்தனை செலவு செய்யவும் சிஐஏ தயாராக இருந்தது. சோவியத் யூனியன் என்கிற இரும்புத் திரைக்குள் என்னதான் நடக்கிறது, அவர்களின் சிவப்பு இராணுவம் என்ன செய்துகொண்டிருக்கிறது, அவர்களுடைய ஆயுத பலம் எப்படிப்பட்டது, அணு ஆராய்ச்சி எந்த நிலையில் இருக்கிறது, கண்டம் விட்டுக் கண்டம் பாய்கிற. ஏவுகணைகளையெல்லாம் அவர்கள் தயார் செய்து விட்டதாக சொல்கிறார்களே, அமெரிக்காவை நோக்கி அதைத் திருப்பி வைத்துக்கொண்டு ஸ்விட்ச் போடக் காத்திருப்பதாகப் பேசிக்கொள்கிறார்களே, அதெல்லாம் உண்மைதானா.

கேள்விகள், கேள்விகள். எதற்கும் பதில்தான் தெரியவில்லை. சிஐஏவின் பொறுமை தீர்ந்துகொண்டிருந்தது. 1960 ஆம் ஆண்டு, மே 1 ஆம் திகதி. "Lock heed U-2" என்ற வகையைச் சேர்ந்த ஓர் அமெரிக்க விமானம், பாகிஸ்தானிலிருந்து நோர்வே நோக்கிப் பறந்து சென்றது. அதனை ஓட்டிச் சென்ற விமானியின் பெயர், ஃப்ரான்சிஸ் கேரி பவர்ஸ் (Francis Gary Powers).


பாகிஸ்தான், பிரச்சினையில்லை. நோர்வே கூட ஓகேதான். இரண்டுக்கும் நடுவில், சோவியத் யூனியன் இருக்கிறதே, அதுதான் பிரச்சினையாகிவிட்டது.

இப்படி ஓர் அமெரிக்க விமானம் தங்கள் எல்லைக்குமேல் பறக்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட சோவியத் யூனியன், நிச்சயமாக அது ஓர் உளவு விமானம்தான் என்று முடிவு கட்டிவிட்டது.

உடனடியாக, அதனைத் தாக்கிக் கீழே இறக்க முயன்றார்கள். இந்தத் தாக்குதலில், U-2 விமானம் கட்டுப்பாடு இழந்து கீழே விழத் தொடங்கியது. அதன் விமானி பவர்ஸ், பாராசூட்மூலம் குதித்து உயிர் தப்பினார்.

அதன்பிறகுதான், திரைமறைவு விவகாரங்கள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. உயிரோடு பிடிபட்டிருந்த அமெரிக்க விமானி பவர்ஸ், U-2 விமானத்தினுள் சிக்கியிருந்த இரகசிய கமரா, அதில் பதிவாகியிருந்த சோவியத் புகைப்படங்கள் என்று ஒவ்வொரு அதிர்ச்சியாக வெளிக்கொண்டுவந்தது சோவியத் யூனியன்.

அமெரிக்கா, சிஐஏவுக்கு அவமானத்தில் முகத்தை எங்கே புதைத்துக்கொள்வது என்று தெரியவில்லை. அவர்கள் சோவியத் யூனியனை உளவு பார்த்திருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு விட்டது.



இதையடுத்து, அமெரிக்க விமானம், விமானி இரண்டையும் சோவியத் வீரர்கள் சுற்றி வளைத்துப் பிடித்துவிட்டார்கள். ஆனால், வேண்டுமென்றே இந்த விடயத்தை மறைத்துவிட்டார்கள். வெளியே சொல்லாமல் திடீரென்று தங்கள் விமானத்தைக் காணோம் என்றதும், அமெரிக்கா சும்மா இருக்குமா? "எங்களுடைய ஆராய்ச்சி விமானம் ஒன்று தொலைந்துபோய்விட்டது" என்று பகிரங்கமாக அறிவித்தார்கள்.

இதற்காகவே காத்துக்கொண்டிருந்த அப்போதைய சோவியத் ஜனாதிபதி குருச்சேவ் (Nikita Khrushchev) ஓர் அறிக்கை வெளியிட்டார், "சோவியத் யூனியனை உளவு பார்க்க வந்த ஒரு விமானத்தை, நாங்கள் சுட்டு வீழ்த்தியிருக்கிறோம்"

"அடடா, அது எங்கள் விமானம்தான்" என்று ஒப்புக்கொண்டது அமெரிக்கா, "ஆனால், அது உளவு விமானம் இல்லையே, நாங்கள் ஏன் உங்களை உளவுபார்க்கப்போகிறோம்? அபசாரம், அபசாரம்" என்றார்கள் நல்ல பிள்ளைகள்போல்.

இதன்மூலம், அமெரிக்கா சோவியத் இடையிலான நல்லுறவுப் பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்பட்டன. "அமெரிக்கா தனது உளவு நடவடிக்கைகளுக்கு மன்னிப்புக் கேட்டாக வேண்டும்" என்று முறைத்துக் கொண்டார் குருச்சேவ். "சான்ஸே இல்லை" என்று சொல்லிவிட்டார் (Dwight D Eisenhower).

இதைப்பற்றியெல்லாம் சிஐஏ அவ்வளவாக அலட்டிக்கொள்ளவில்லை, இப்போது அவர்களுடைய கவலையெல்லாம், இந்த சோவியத் சனியனை எப்படிதான் உளவு பார்ப்பது?

பாராசூட்டில் ஆள் அனுப்பினால் பிடித்து உள்ளே தள்ளுகிறார்கள், பலூன் அனுப்பினால் ஊசியால் குத்தி வெடிக்கவைக்கிறார்கள், விமானம் அனுப்பினால் சுட்டுக் கீழே இறக்கி விடுகிறார்கள். பின்னே இவர்களை என்ன செய்யமுடியும்?

இனிமேல், ஆள்களை நம்பிப் பிரயோஜனமே இல்லை என்று, தொழில்நுட்பத்தை நம்பத் தொடங்கியது அமெரிக்கா. ஆளில்லாத உளவு விமானங்கள், செயற்கைக் கோள்கள் போன்றவற்றை உருவாக்கும் ஆராய்ச்சிகளில் இறங்கினார்கள்.

அடுத்த பல வருடங்களுக்கு, சிஐஏவின் முக்கிய ஆயுதங்கள், இந்தத் தொழில்நுட்ப உளவாளிகள் தான்.

வருடாந்திர பட்ஜெட்டில் ஏகப்பட்ட பணத்தை விழுங்கினாலும், இவற்றின்மூலம், உட்கார்ந்த இடத்தில் உலகம் மொத்தத்தையும் அவர்களால் உளவு பார்க்க முடிந்தது."

அப்படி அவர்கள் ஊர்முழுக்க உளவு பார்த்துக்கொண்டிருந்தபோதுதான், க்யூபாவிலிருந்து வந்த ஒரு தகவல் அவர்களை உறுத்தியது - சோவியத் யூனியன் கப்பல்கள் அடிக்கடி க்யூபாவுக்கு வந்துபோகின்றன.

சோவியத்துக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டால், தாடிக்கார ஃபிடல் காஸ்ட்ரோ கண்டிப்பாக பதில் சொல்லப்போவதில்லை. குருச்சேவ் அவரை விடக் கெட்டி, வாயைத் திறக்கக்கூடமாட்டார்.

இந்த விடயத்தை நாமேதான் கண்டுபிடிக்கவேண்டும் என்று முடிவுசெய்தது சிஐஏ. இதற்காகத் தங்களது "U-2" உளவு விமானங்களை க்யூபாவுக்கு அனுப்பிவைத்தார்கள்.

காஸ்ட்ரோவின் பாதுகாப்புப் படை வலுவானதுதான். ஆனால், சோவியத் யூனியன் அளவுக்கு அவர்களிடம் ஆயுத பலமோ, நவீன தொழில்நுட்பங்களோ இல்லை. ஆகவே, அமெரிக்காவின் இந்த அத்துமீறலை அவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை.

இதனால், க்யூபாவில் சந்தேகத்துக்கு இடமான பல பகுதிகளை நன்றாகப் படம் எடுத்துக்கொண்டு அமெரிக்க விமானங்கள் திரும்பிச் சென்றன. கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு இந்தப் புகைப்படங்களை அலசி ஆராயத் தொடங்கியது சிஐஏ.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

பட்ஜெட்டைத் தாக்கல் செய்தார்.

இது அவர் தாக்கல் செய்யும் 9ஆவது பட்ஜெட் ஆகும். "வளர்ச்சியடைந்த பாரதம்" என்ற இலக்கை மையமாகக் கொண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த பட்ஜெட்டில், உட்கட்டமைப்பு, விவசாயம், தொழில்நுட்பம் மற்றும் அண்டை நாடுகளுடனான உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தியாவின் "அண்டை நாடுகளுக்கே முன்னுரிமை" கொள்கையின் அடிப்படையில், இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவியில் இம்முறை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கு நிதியுதவியாக 400 கோடி இந்திய ரூபாயை இந்தியா ஒதுக்கியுள்ளது. இது கடந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட 300 கோடி ரூபாயை விட 100 கோடி அதிகமாகும்.

இந்த நிதியானது இலங்கையில் முன்னெடுக்கப்படும் வளர்ச்சித் திட்டங்கள், மனிதாபிமான உதவிகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-7)

## ரி20 உலகக்...

ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கையில் இடம்பெறவுள்ள நிலையில், தொடருக்கான கிண்ணம் நேற்றைய தினம் வடக்கு மாகாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது.

அதன் பிரகாரம் நேற்றுக் காலை 7.30க்கு தம்புள்ளையில் இருந்து எடுத்துவரப்பட்ட உலகக் கிண்ணமானது முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா நகரத்துக்கு எடுத்துவரப்பட்டு அங்கு வைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து மதியம் 12.00 மணியளவில் கிளிநொச்சியில் வைக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அங்கிருந்து எடுத்து வரப்பட்டு பிற்பகல் 3.30க்கு யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையிலும் மாலை 4.25க்கு நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலிலும் இரவு 6.20க்கு துரையப்பா விளையாட்டு அரங்கிலும் இரவு 6.40க்கு யாழ்ப்பாணம் கோட்டையிலும் இரவு 7.10க்கு யாழ்ப்பாணம் நூலகத்திலும் வைக்கப்பட்டுள்ளது.

ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் இந்த முறை இலங்கையிலும் இந்தியாவிலும் நடைபெறவுள்ளன.

இதன்படி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நெதர்லாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் கொழும்பில் நடைபெறும் ஆட்டத்துடன் உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## நயினை மீனவர்...

தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த சம்பவமானது நேரலையாக இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு காண்பிக்கப்பட்டுள்ளதுடன் முறைப்பாடும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டவேளை, இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த இந்திய கடற்றொழிலாளர்களின் படகொன்று அப்பகுதியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டது.

அவர்களைத் தமது கடற்பரப்பினுள் இருந்து வெளியேறுமாறு நயினாதீவு கடற்றொழிலாளர்கள் அறிவுறுத்தியும் அதனை மீறியும் தொழிலில் ஈடுபட்டனர்.

அத்துடன் அவர்களின் படகுக்கு அருகில் சென்ற நயினாதீவு கடற்றொழிலாளர்கள் மீது கல்வீச்சுத் தாக்குதலிலும் ஈடுபட்டுள்ளனர்.

அதனையடுத்து கைத்தொலைபேசியில் "வீடியோ கோல்" ஊடாக இந்தியத் துணைத்தூதரக அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்ட, கடற்றொழிலாளர் ஒருவர், நேரடியாக இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைக் காண்பித்துள்ளார்.

இதன்போது படகின் இலக்கத்தினைத் தூதரக அதிகாரி வினவிய வேளை, படகின் இலக்கம் அழிக்கப்பட்டிருந்ததனை அவதானித்துள்ளனர்.

பின்னர் இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் காணொளி ஆதாரங்களுடன் முறைப்பாடு ஒன்றினைத் தூதரக அதிகாரிக்கு நயினாதீவு கடற்றொழிலாளர்கள் அனுப்பி வைத்துள்ளனர். (ந-7)

## கொட்டும்...

யாழ்ப்பாணம் தையிட்டி, திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று ஞாயிற்றுக்கிழமை (01) கொட்டும் மழைக்கு மத்தியிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் குறித்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறியும், அதனை அங்கிருந்து அகற்றுமாறு கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்துக்கும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஆரம்பித்த போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் கொட்டும் மழையிலும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டகளத்தில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## வடக்...

வாய்ப்புள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

இலங்கையின் தென்பகுதியில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போதுகிடைத்து வரும் மழை இன்றும் நாளையும் எதிர்வரும் 04 ஆம் திகதியும் தொடரும் வாய்ப்புள்ளது.

எனவேவடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெல் அறுவடை மற்றும் நெல் உலரவிடும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகள் இந்த நாட்களில் (எதிர்வரும் 04.02.2026 வரை) இந்தச் செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வது சிறந்தது. (ந-7)

## யாழில் வாகன விபத்து நான்கு பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அம்மன் வீதிப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கார் ஒன்று அம்மன் வீதியினூடாகத் திரும்ப முனைந்தபோதே மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2026.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 6092
J 1 9 3 2 4 4
அத சம்பத
J 3 2 4 4
சீட்டிழுப்பு இலக்கம் 0667
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 298
மேடம் 23 32 39 6745

தன நிதானய
திகதி - 2026.02.01
சீட்டிழுப்பு இலக்கம் - 2122
F 16 42 46 56 F

மெகா பவர்
திகதி 01/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2440
Q 19 25 47 52 65

ஜய ஜய JAYA
திகதி 2026.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 0360
E 1 7 7 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4334
சீட்டிழுப்பு திகதி 01.02.2026
O 46 50 55 65
O

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 1401
மீனம் 09 19 43 56 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.02.2026 வெற்றி வாரம் 0800
B 1 0 6 3 1 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,221,308.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3066
சீட்டிழுப்பு திகதி 2026.02.01 தினம் ஞாயிற்றுக்கிழமை
24 39 69 75 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,624,597.60

சனிதா
திகதி 01.02.2026 வெற்றி வாரம் 5227
08 25 30 50 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,451,122.40

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 896
சீட்டிழுப்பு திகதி 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை
25 41 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,348,040.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4778
சீட்டிழுப்பு திகதி 01.02.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
12 19 37 41 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,520,738.80

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 34 25 32 57 74
சீட்டிழுப்பு வாரம் 2242
01.02.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.625,247,809.80

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2892
சீட்டிழுப்பு திகதி: 2026.02.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84,738,576.00
09 28 35 71 U

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத்தளங்களை பயன்படுத்த சிறுவர்களுக்குத் தடை

## முன்மொழிவு அமைச்சிடம் கையளிப்பு



(கொழும்பு)

**இலங்கையில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான உத்தியோகபூர்வ முன்மொழிவு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவரும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியுமான இனோகா ரணசிங்க, இதற்கான சட்ட ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்குச் சற்று கால அவகாசம் எடுக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடையை நடைமுறைப்படுத்த நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், ஆரம்பகால சிறுவர் அபிவிருத்திக்கான தேசிய செயலகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகிய மூன்று நிறுவனங்களின் ஆலோசனைகள் அவசியமாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகாரப் பிரதி அமைச்சர் நாமால் சுதர்சன, இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

சிறுவர்கள் சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது குறித்த விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என்றார்.

இதேவேளை இலங்கை சமூக மருத்துவ நிபுணர்கள் கல்லூரி வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின்படி,

கட்டுப்பாடற்ற சமூக வலைத் தளப் பயன்பாடு சிறுவர்களின் உடல் மற்றும் மன நலனைப் பாதிப்பதாகத் தெரிவித்துள்ளது.

8-12 வயதுடைய சிறுவர்கள் ஒரு நாளைக்குச் சராசரியாக 5 மணிநேரமும், இளைஞர்கள் 7 மணிநேரமும் திரைகளுக்கு முன்னால் செலவிடுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் நன்மைகளைத் தடுப்பது இதன் நோக்கமல்ல. மாறாக, சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உகந்த பாதுகாப்பான சூழலை உருவாக்குவதே இதன் இலக்கு என மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சட்டத்தின்...

புலனாய்வுத் திணைக்களம் சட்டத்தின் பிரகாரமே செயற்படுவதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கானது அண்மையில் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது,

ரணில் விக்கிரமசிங்க சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன மற்றும் அனுஜ பிரேமரத்ன ஆகியோர் சிஐடியின் செயற்பாடுகளைக் கடுமையாகச் சாடினர்.

மேலும் பல்கலைக்கழகத்தின் அழைப்பிதழ் உண்மையானதா? என்பதை அறிய சிஐடி மேற்கொண்ட லண்டன் பயணம் தோல்வியடைந்தது.

வெளிநாட்டு விசாரணைகளுக்கு அவசியமான "பரஸ்பர சட்ட உதவிச் சட்டத்தை" சிஐடி பயன்படுத்தவில்லை.

இது ஒரு உத்தியோகபூர்வ பயணத்தின் நீடிப்பு என்றும் ஜனாதிபதியுடன் பாதுகாப்புப் பிரிவினர் செல்வது இயல்பான ஒன்று என்றும் அவர்கள் வாதிட்டிருந்தனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஆனந்த விஜேபால, சிஐடி சுதந்திரமாகச் செயற்படும் அதிகாரம் கொண்டது.

சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என எதிர்த்தரப்புச் சட்டத்தரணிகள் கருதினால், அதனை அவர்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கட்டும். இந்த விவகாரத்தில் இறுதி முடிவை நீதிமன்றமே எடுக்கும்.

ஒவ்வொரு சிறிய விசாரணைக்கும் சட்டமா அதிபரிடம் அனுமதிபெறவேண்டிய அவசியம் சிஐடிக்கு இல்லை எனவும் குறிப்பிட்டார். (ந-7)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்...
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள் கல்யாணி மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்

தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4926)
076 825 7716 (ஆகாஸ்)

ஆங்கில வகுப்புக்கள்
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
ஆங்கில வகுப்புகள் (English Classes)
பேச்சு ஆங்கிலப் பாடநெறி (Spoken English)
ஆரம்பம் : 05.02.2026
வியாழக்கிழமை காலை 10.00மணி
LECTURER - S.USENTHINI
(B.Ed.in English LANGUAGE TEACHING)
IELTS INSTRUCTOR
இடம்:
சதாபொன்ஸ் மாலிசந்தி, அல்வாய்
தொடர்புகளுக்கு: (C-4925)
077 309 5176,077 176 8431


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org